போதனை விஷய பூங்கொத்து

563

மாதமொருமுறை மலரும்

563
18 DEC 1945

... A. Lourduswami, B.A., L.T.
... Training School, Trichinopoly.

JL
ஊ211, N11PP
N45 ·36· 5,6
189998

...வம்பர், டிசம்பர் 1945 மலர் 5, 6

R. C. போதனாமுறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 36] 15 நவம்பர், டிசம்பர் 1945 [மலர் 5, 6

பத்திராதிபர் குறிப்புகள்

நம் பாடசாலைதினக் கொண்டாட்டங்கள் (Our School Day Celebrations.)

நாம் ஏற்கனவே அறிவித்திருந்தபடி ஷை கொண்டாட்டம் 23—10—45 முதல் 28—10—45 முடிய வெகு சிறப்பாய் நடைபெறலாயிற்று.

நம் பாடசாலை கல்விக் கண்காட்சியை பேராசிரியர் Sri A. Rama Aiyar, M.A., (Vice Principal, the National College, Trichy) அவர்கள் திறந்துவைத்தனர். பரிசளிப்பு விழாவன்று நம் ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) Sri T. V. Appar Sundara Mudaliar, M.A., L.T. அவர்கள் தலைமைவகித்துப் பரிசுகள் வழங்கியும், அன்று மாலை நடைபெற்ற ஆங்கில, தமிழ் நாடகங்களுக்கு சபாநாயகராக விளங்கியும், எம்மை கௌரவித்தருளினர்.

ஷை வைபவங்கள் முன் வருடங்களைவிட எல்லா வகைகளிலும் சிறந்து மிகவும் வெற்றிகரமாக நிறைவேறியதை, ஷை வைபவங்களைக் கண்டுகளித்த, மகாஜனங்களுடைய மகிழ்ச்சியில் நாமும் கலந்துகொண்டு எம் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இச் சந்தர்ப்பத்தில் நம் கல்விக் கண்காட்சி வெகு சிறப்பாயும் பயனுள்ளதாகவும் ஆக்குவதற்காக நேர்த்தியான காட்சிப் பொருட்களைத் தயாரித்தனுப்பிய நம் பழைய புது மாணவர்கட்கும் ஏனைய நேயர்கட்கும் இன்னும் ஷை கண்காட்சியைக் காணவந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்கட்கும், ஆயிரக்கணக்கான மாணவர்கட்கும் எமது நன்றியை இதன்மூலம் செலுத்துகிறோம். அவர்கள் அனைவரும் ஷை கண்காட்சியின் முழுப்பயனையும் எய்துவார்களாக.

மற்றும் நம் பாடசாலை பரிசளிப்பு விழாவன்று, பரிசுகள் பெற்ற நம் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்க உதவிய நம் பழைய மாணவர்கள், ஏனையோர்களுக்கும் நம் மனமார்ந்த வாழ்த்துதலைக் கூறுவதுடன் அன்று தலைமைவகித்த நம் ஜில்லா கல்வி அதிகாரி அவர்களுக்கு (D. E. O.) எமது மனமுவந்த வந்தனங்களை இதன்மூலம் செலுத்துகின்றோம். அவ்வமயம் நடைபெற்ற நாடகங்களைக்கண்டு களிக்க ஏராளமாய்க் குழுமியிருந்த சபையோர்களுக்கும் ஷை நாடகங்களை இன்னிசைகளில் சிறந்து விளங்கும்படி உதவிய "திருச்சி கத்தோலிக்க தமிழ் இசைச்சங்க வாத்தியகோஷ்டியார்" அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி உரிமையாகும்.

சென்னை கல்வி இலாகா

[Page 365 of Part I B. of Fort St. George Gazette, dated 23—10—1945.]

VIII வகுப்பு முடிவு அரசாங்கப் பரீட்சை 1946

அறிக்கை:—ஷை பரீட்சை எழுத "ப்ரைவேட் மாணவர்களிடமிருந்து" (Private Candidates) மனுக்கள் (Applications) பெற்றுக்கொள்ளப்படும். பின்வரும் விதிகளை ப்ரைவேட் மாணவர்கள் அறிவார்களாக:—

I. VIII வகுப்பு முடிவு பரீட்சை (E. S. L. C.) எழுதித் தேறியதற்கு அத்தாட்சியாக அரசாங்க கல்வி அதிகாரிகளால் அளிக்கப்பட்ட "சர்ட்டிபிக்கேட்" (Certificate) பெற்றவர்கள் எல்லோரும் ஷை பரீட்சை எழுதலாம். மனுசெய்துகொள்ளும்போது அவரவர் தத்தம் E. S. L. C. ஸர்ட்டிபிக்கேட்டையும் சேர்த்து அனுப்பவேண்டும். இவர்கள் எழுதவேண்டிய கட்டாயப் பாடங்கள் (Compulsory Subjects) 1. பாஷை, 2. கணிதம், 3. சரித்திரம், பூகோளம், அரசியல் (Civics).

II. 1942, 1943, 1944, 1945-ம் வருஷங்களில் ஷை அரசாங்கப் பரீட்சை எழுதித் தவறிப்போனவர்கள் மீண்டும் ஷை கட்டாயப் பாடங்களில் எல்லாம் ப்ரைவேட் மாணவர்களாகப் பரீட்சை எழுத வேண்டும்.

இங்கிலீஷ் பாடத்தை (English) ஷை மூன்று பாடங்களுடன் ஒரு இஷ்டப் பாடமாக (Optional Subject) சேர்த்துக்கொண்டு, இந்த நான்கு பாடங்களிலும் ஷை அரசாங்கப் பரீட்சை எழுதலாம். ஆனால் ஸெக்கண்டரி ஸ்கூலில் IV பாரத்தில் (IV Form Secondary School) சேர்ந்து படிக்க விரும்புகிறவர்கள், கல்வி அதிகாரிகளால் வழங்கப்படும் VIII வகுப்பு E. S. L. C, சர்ட்டிபிக்கேட்டுடன், English Optional பாடத்தையும் சேர்த்துக்கொண்டு, ஆக நான்கு பாடங்களிலும் ஷை பரீட்சை எழுதவேண்டும். இந்த நான்கு பாடங்களிலும், VIII வகுப்பு அரசாங்க முடிவு பரீட்சையில் தேறினவர்கள் IV பாரத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

III. மேலும், 1945-ல் ஷை நான்கு பாடங்களிலும் பரீட்சை எழுதி இங்கிலீஷில் மாத்திரம் தேறாமல், மற்ற மூன்று பாடங்களில் தேறியிருந்தாலும், IV பாரத்தில் சேர்ந்து படிக்க விரும்பினால், ஷை நான்கு பாடங்களிலும் பரீட்சை எழுதித் தேர்ச்சிபெறவேண்டும்.

IV. 1945-ல் இங்கிலீஷ் (Optional) பாடத்தில் மாத்திரம் பரீட்சை எழுதாமல்; மற்ற மூன்று கட்டாயப் பாடங்களில் பரீட்சை எழுதித் தேர்ச்சிபெற்றவர்கள், மீண்டும் இங்கிலீஷ் உள்பட நான்கு பாடங்களிலும் பரீட்சை எழுதவேண்டும். ஆனால் அப்பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து போதிய ஆஜர் நாள் (Attendance) இருந்ததற்கு அத்தாட்சி தேவையாகும்.

V. 1942, 1943, 1944-ம் வருஷங்களில் ஷை VIII வகுப்பு முடிவு பரீட்சையில் தவறிப்போனவர்கள், மீண்டும் கட்டாயப் பாடங்கள் மூன்றுகளுடன் "இங்கிலீஷ்" (English Optional) பாடத்தையும் சேர்த்துக்கொண்டு இந்த நான்கு பாடங்களிலும் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

1942, 1943, 1944-ம் வருஷங்களில் "இங்கிலீஷ் (Optional) தவிர, மற்ற மூன்று பாடங்களுக்கு மாத்திரம் பணம்கட்டி VIII வகுப்பு அரசாங்கப் பரீட்சை தேறினவர்கள், வரும் 1946-ல் இங்கிலீஷ் (Optional) மாத்திரம் எடுத்துக்கொண்டு, ப்ரைவேட் மாணவராக ஷை பரீட்சை எழுதலாம். இந்த இங்கிலீஷ் பாடத்திலும் தேறிவிட்டால் IV பாரத்தில் சேர்ந்துபடிக்க யோக்யதாம்சம் உண்டு. VIII வகுப்பில் சேர்ந்து ஒரு வருஷம் இங்கிலீஷ் பாடம் கற்றுக் கொண்டு, போதிய ஆஜர் நாள் (Attendance) பெற்றுக்கொண்டு, பள்ளிக்கூடத்தின் மூலமாய் ஷை பரீட்சையில் இங்கிலீஷ் பாடத்துக்கு மாத்திரம் எழுதலாம்.

இத்தகையோர் ஷை பரீட்சையில் இங்கிலீஷில் தவறிப்போனாலும், மீண்டும் அந்த இங்கிலீஷ் பாடத்தில் மாத்திரம் அடுத்துவரும் வருஷங்களில் பரீட்சை எழுதலாம். ஏற்கனவே தேறியுள்ள மற்ற மூன்று பாடங்களும் இதனால் பாதிக்கப்படுவதில்லை.

189998

யோசனைக் கணக்கு விடை

(கொத்து 36, மலர் 4, பக்கம் 61-ன் கணக்கு)

விடை :—4 நாட்களுக்குப்பின் 6 பேர் நீங்கினர்.

ஷை விடையளித்தவர்கள் :—

1. R. S. Padmanabhan, 2. J. Amaladas, Konnaikudi, 3. D. M. Venkateswaran, Secretary, Tiruvadanai, 4. D. Thangasamy, Sec. Teachers' Association, Singikulam, 5. S. Mathalaimuthu, Elamanur, 6. Abdhul Razack, 7. S. Ramasamy, 8. S. Govindasamy Pillai, Vikravandi, 9. S. Muthuvanni Muthuraja, Kariamanikkam, 10. V. Nagalingam, Salamangalam, 11. S. Arputhasamy, Puthur, Trichy, 12. A. Ponnambalam, 13. Puliampatti, S. Krishnamurthi, S. 2.

போதனுமுறையும் பவணந்தி முனியும்

[M. A. S., T. P.]

(கொத்து 36, மலர் 4, பக்கம் 52-ன் தொடர்ச்சி.)

இனி ஆசிரியராவர்க்கு இன்றியமையாதது அருள். அருளாவது இயைபின்றி யாவர்மாட்டும் செல்லும் கண்ணோட்டம். இக்கொள்கையுடையார்க்கே மக்கள் துயர்தீர்க்கும் மனப்பான்மை பெரிதும் உண்டாம், ஆதலின் அருள் வேண்டும் என்றார். மூன்றுவதாகத் தெய்வங்கொள்கை. அஃதாவது கடவுள் ஒருவர் உண்டென அறிந்தும் தம்மையறிந்தும் இல்லறம்விடுத்து நல்லறமியற்றுதலும், இத்தகையுடையார்க்கே யாம் பெறும் இன்பம். இவ்வையகம் எய்துகவெனத் தாம் பெற்ற கல்விப் பொருளையும் கடவுள் உணர்வையும் கற்பார்க்கினிதூட்டிக் கண்ணிரண்டும் அளிக்கும் கருத்துண்டாமாதலின் தெய்வங்கொள்கையை அதன்பின் வைத்தார். மேற்கூறப்பட்ட குலம், அருள், கடவுள் வழிபாடு என்ற மூன்றனுலும் சிறப்புறுதலோடு, பல கலைகளையும் ஆராய்ந்து தெளிந்த அறிவுத் தெளிவுடைமையும், கற்றுக் கேட்டு உய்த்து உணர்ந்த கலைகளைக் கேட்டார்ப் பிணிக்குந்தகைமையோடு எடுத்துக்கூறும் திறமுடைமையும் புவியினையும், மலையினையும், தராசுகோலினையும், மலரினையும் ஒப்பாகுமெய்த்தன்மையும், உலகியலறிவும் பெறுதல்வேண்டும் என்றார். அவையாவன:— ஆசிரியன் பூமிபோன்றிருத்தல் வேண்டும், மலைபோன்றிருத்தல் வேண்டும். தீராசுகோல்போன்றிருத்தல் வேண்டும், மலர்போன்றிருத்தல் வேண்டும். எனக்கூறி அவைபோலாமாற்றினையும் விளக்குகின்றார். விளக்கம் பிற்காண்க.

தொடரும்.

பாடக் குறிப்பு

[M. Krishnamurthi]

18 DEC 1945

பாடம்: பொது அறிவு. வகுப்பு: III Std. நேரம்: 35 நி.

நோக்கம்: சந்தை அல்லது மார்க்கட்—அங்கு விற்பனை நடைபெறும் விதம்—என்பதை அறிவித்தல்.

பீடிகை: தினசரி போஜனத்தில் உபயோகிக்கப்படும் உணவுப் பொருட்கள், காய்கறி பழங்கள் முதலியவற்றைப்பற்றி சம்பாஷித்தல். பின் அவற்றின் விற்பனையாகும் விதம், இடம் முதலியவற்றைப்பற்றிப் படிப்போம் என்று நோக்கம் வெளியிடல்.

விஷயமும் முறையும்: சந்தையில் உள்ள பொருள்கள் வகை வகையாக வரிசை செய்யப்பட்டிருக்கின்றன. (1) தானியக் கடைகள் (அரிசி, சோளம் முதலியன) (2) பலசரக்குக் கடைகள்

(உப்பு, புளி, மிளகாய் முதலியன.) (3) காய்கறிகள்—வெற்றிலை—தேங்காய், பழம் மற்ற பலவித தினுசுகள். (4) மீன், இறைச்சி. (5) பலகாரம், பட்சணம், தின்பண்டங்கள். (6) சட்டிபானை முதலிய சாமான்கள். (7) விளையாட்டுச் சாமான்கள். (8) சட்டை துணிமணிகள்.

[குறிப்பு]: பிள்ளைகளின் முன்னறிவுடன் சம்பந்தப்படுத்திக் கூறியும், க. ப. வில் சுருக்கமாய் எழுதியும் விளக்குக.

ஷ பொருள்கள் விற்பனை செய்யப்படும் விதம்: (1) தானிய வகைகள். முகத்தலளவைக்கொண்டு படி, (ஆழாக்கு) (2) பல சரக்குகள் (சில முகத்தல் சில நிறுத்தல்—தராசு படிக்கல்—பலம், சேர், வீசை.) (3) காய்கறிகள். சில எண்ணிக்கை, சில நிறுத்தல் மூலமாய்—வெற்றிலை கவுளி (100) பழம்—அணவுக்கு எத்தனை. சில டஜன் என்ன விலை. தேங்காய் ஒன்று என்ன விலை.

[குறிப்பு]: முகத்தல் அளவைகளையும், நிறுத்தல் கற்களையும் காட்டலாம்.

அப்பியாசம்:

1. சந்தையில் பண்டங்கள் வகைவகையாகப் பிரித்துவைப்பது எதற்காக?

2. அரிசி, பருப்பு, சோளம், மிளகாய், உப்பு, கடுகு, பூண்டு, மஞ்சள் இவை ஒவ்வொன்றையும் வாங்கும் விதம் (எந்த அளவை) யாது? எப்படி விலை கேட்பாய்?

3. வாழைப்பழம் ஒன்று என்ன விலை? அணவுக்கு எத்தனை பழங்கள்? இக்கேள்விகளில் எக்கேள்வியைப் போடுவாய்? ஏன்?

4. நீ மறுபடி சந்தைக்குப் போகும்போது இந்தப் பாடத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்வாயா?

[குறிப்பு]: இப்பாடத்தின் முக்கியத்தை விளக்க பிள்ளைகளை மார்க்கட்டிற்கு அழைத்துச் சென்று, மேலே கூறிய சில அம்சங்களை கவனிக்கும்படி செய்யலாம்.

யோசனைக் கணக்கு

(M. Ramasamy & Perumal)

ஒரு பழம் விற்பவன் சாத்துக்குடி ஆரஞ்சு சில, குடகு ஆரஞ்சு சில, சேலம் ஆரஞ்சு சில ஆக 20 பழங்கள் கொண்டுவந்தான். என்ன விலை என்று கேட்டதற்கு 5 ரூபாய் என்றான். ஒவ்வொரு வகையின் விலை முறையே 8 அணா, 4 அணா, 2 அணா என்றால் வகைக்கு எத்தனை பழங்கள்?

---

18 DEC 194
MADR

ஆரம்ப வகுப்புகளில் சரித்திரம் போதிப்பதெப்படி?

[K. S. Michaelswamy]

ஆரம்பப் பாடசாலை கல்வித் திட்டத்தில் சரித்திரப் பாடம் கட்டாய பாடங்களில் ஒன்றாகக் கருதப்பட்டு போதிக்கப்படுகிறது. ஈண்டு அச்சரித்திரப் பாடத்தை ஆரம்ப வகுப்புகளில் எவ்வாறு போதிப்பது என்று ஆராய்வோம்.

சரித்திரப் பாடத்தின் நோக்கங்களும் பலன்களும் :—போதிக்கும் முறை யாது? என்பதைக் கூறுமுன், சரித்திரப் பாடத்தினு லுண்டாகும் பலாபலன்களையும், போதனையின் நோக்கங்களையும் ஒரு சிறிது கூறுவோம். அனுதின வாழ்க்கை, சமூக வாழ்க்கை, அரசியல் வாழ்க்கை இவற்றிற்கு அத்யாவசியமான சரித்திர விஷயங்களைக் கற்பித்தல், நீதி அநீதி, சரி தவறு, இவைபோன்ற நீதித்தத்துவங்களைப் புலப்படுத்துதல்; தேசாபிமானத்தை வளர்த்தல், நவீனகால அரசாங்க முறைகளிலும் ஸ்தாபனங்களிலும் ஆசைகொள்ளச் செய்தல், சரித்திர பான்மை, ஞாபகச்சக்தி, பாவனுச்சக்தி, யூகசக்தி முதலிய மனோசக்திகளை வளர்த்தல் முதலானவை சரித்திர பாடம் போதிப்பதின் பொது நோக்கங்களாகும். ஆரம்ப வகுப்புகளில், சரித்திரத்தில் நிலையான ஆசை உண்டுபண்ணுதல், மனித சமூகம் விருத்தியான விதத்தை மனதிற் பதிய வைத்தல், சமூக வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படையான விஷயங்களைக் கற்பித்தல், நிகழ்கால சரித்திரத்தைப்பற்றிய அறிவு ஏற்படுத்துதல், ஞாபகசக்தி கற்பனுசக்தி அனுமான சக்தி இவற்றை விருத்தி செய்தல், ஆகிய சிறப்பான நோக்கங்களைக் குறிக்கோளாகக்கொண்டு சரித்திர பாடத்தைப் போதிக்க வேண்டும்.

சரித்திரம் மனிதன் சமூகத்தில் வாழ்வதற்குரிய அறிவையளிக்கிறது. வருங்கால அரசியல் முறையை அமைப்பதிலும், அதில் பங்கெடுத்துக்கொள்வதிலும் சரித்திர நூல் உதவுகிறது. சரித்திர போதனை இதய உணர்ச்சியை விரிவடையச்செய்கிறது. மனதை விசாலிக்கச்செய்கிறது. சரித்திர உண்மைகளை ஆராய்ந்தறிவதில் பயிற்சி ஏற்படுத்துகிறது. புத்தகங்களைப் படிப்பதில் ஓர் ஆசையை உண்டாக்குகிறது. தேசபக்தியை வளர்க்கிறது. இளைஞர்களுக்கு இயற்கையாகவுள்ள ஆவல்களைப் பூர்த்திசெய்யவும், ஞாபகசக்தி, கற்பனுசக்தி, அனுமான சக்தி இவற்றை விருத்தி செய்யவும் உதவுகிறது.

முறை :—மேற்கூறிய நோக்கங்களைக்கொண்டு மேற்கூறிய பலாபலன்களையடைய ஆரம்ப வகுப்புகளில் சரித்திர பாடத்தை எந்த

முறையைக் கையாண்டு போதிக்கவேண்டும் என்று பார்ப்போம். சரித்திரம் போதிப்பதில் கதை முறை, வர்ணனை முறை, விளக்கல் முறை, சம்பாஷணை முறை, வாழ்க்கைச் சரித்திர முறை, (Biographical method), ஆராய்ச்சி முறை, உபந்நியாச முறை எனப் பல வகை முறைகள் உண்டு. இவற்றுள் கதை முறை, சம்பாஷணை முறை, வாழ்க்கைச் சரித்திர முறை முதலியன ஆரம்ப வகுப்புகளுக்குச் சாலச்சிறந்தவை. சம்பாஷணை முறையும், வாழ்க்கைச் சரித்திர முறையும் கதை முறையில் அடங்குமாகையால் கதை முறையைப் பற்றிப்பார்ப்போம். குழந்தைகள் இயற்கையில் கதை கேட்பதில் மிகுந்த ஆசையுள்ளவர்கள். ஆகையால் சரித்திரத்தைக் கதை மாதிரி போதிக்கவேண்டும் என்பதுதான் கதை முறையின் கருத்து.

கதைகள், புராணக் கதைகள், பரம்பரைக் கதைகள், சரித்திரக் கதைகள் என்று மூன்று வகைப்படும். புராணக் கதைகள் கற்பனை நிறைந்தவை. உதாரணமாக திருப்பாற்கடல் கடைதல், கிரணக் கதை முதலியவற்றில் கற்பனை நிறைந்திருக்கிறது. இவை சரித்திரத்திற்குப் பயன்படா. பரம்பரைக் கதைகள் கற்பனையும் உண்மையும் கலந்தவை. இவற்றில் அற்புத ரசம் அதிகம் மலிந்திருப்பதால் பிள்ளைகளின் மனத்திற்கு இன்பத்தைத் தந்து பாவனு சக்தியை விருத்திசெய்யும். இவற்றிற்கு இதிகாசக்கதைகள், சைவநாயன்மார்களைப்பற்றிய கதைகள் முதலியவற்றை உதாரணமாகக்கொள்ளலாம். சரித்திரக்கதைகள் உண்மைச் சம்பவத்தைக் கூறுகின்றன. இது ஒரு குறிப்பான காலத்தில், குறிப்பிட்ட இடத்தில் நடந்த சம்பவத்தைக் கூறுதலால் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு உற்சாகத்தைத்தராது. ஆகையால் உண்மையாக நடந்த விஷயங்களைப் பல கற்பனைகளுடனும், வர்ணனைகளுடனும் குழந்தைகளின் மனதிற்கு இன்பத்தையும், உற்சாகத்தையும் அளிக்குமாறு போதிப்பதே சரித்திரக் கதைகளின் அழகாகும். சரித்திரக் கதைகள் சரித்திர உண்மையை விளக்கக்கூடியனவாகவும், கெட்ட வழக்கங்கள் தவறுதலான எண்ணங்கள் முதலியன குழந்தைகளிடத்தில் ஏற்படுத்ாதனவாகவும், தீயச் செயலை வெறுத்தல், அனுதாபப்படுதல், வீரம், தேசபக்தி, தியாகம், சுயமுயற்சி முதலிய நற்பண்புகளை எழுப்பக்கூடியனவாகவும், தெரிந்தவற்றிலிருந்து தெரியாததைப் போதிக்கக்கூடியனவாகவும், ஒரே கதா நாயகனையும் கதா நாயகியையும் பற்றியதாகவும், செய்கைகள் நிறைந்தனவாகவும், ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியனவாகவும் இருக்கவேண்டும். அஹிம்சையைப் போதிக்கும் கதைகள், வீரத்தைப் போதிக்கும் கதைகள், மகமதியக் கதைகள் தமிழ்நாட்டு மூவேந்தரைப்பற்றிய கதைகள், ஆங்கில ஆட்சிக் கதைகள் என்று, விஷயத் தொடர்புபற்றியும் காலத் தொடர்புபற்றியும் சரித்திரக் கதைகளை அமைக்கலாம். சரித்திரக் கதைகள் போதிப்

பதில் ஆசிரியரின் திறமை அதிகம் வேண்டற்பாலது. சரித்திரக் கதை போதிக்குமுன் ஆசிரியர் அதன் உட்கருத்துக்களையும் அமைப்பையும் உணர்ந்திருக்கவேண்டும். ஆசிரியர் கதையைப் போதிக்குமுன் நன்றாய்ப் படித்துத், தொகுத்து வரிசைப்படுத்திக்கொண்டு இருந்தால்தான் எந்தெந்த இடங்களில் நிறுத்தவேண்டுமோ ஆங்காங்கு நிறுத்தியும், சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி குரலைத் தாழ்த்தியும் உயர்த்தியும், துக்கம் சந்தோஷம் ஆகிய உணர்ச்சிகளை முகக்குறிகளால் காட்டியும், சைகைகளாலும், நடிப்புகளாலும் கதையை வர்ணித்து பிள்ளைகளின் மனதில் பதியும்படி போதிக்கமுடியும். உயிருடனும், உற்சாகத்துடனும், குழந்தைகளின் முகத்தைப்பார்த்து குழந்தைகளோடு குழந்தையாயிருந்து, தம்மை மறந்து வாய்மொழியாகக் கதை சொல்வதுதான் சிறந்தது. வகுப்புக்கேற்ற பாஷையில் கதைகளை ஒரு நாடகம்போல் குழந்தைகளின் மனக்கண்முன் தோன்றும்படி வர்ணிக்கவேண்டும். ஆகவே கற்பனு சக்தியும், வர்ணிக்கும் சக்தியும் ஆசிரியரிடம் இருக்கவேண்டும். இந்தச் சக்திகள் பிள்ளைகளுடைய ஆவலையும் எழுப்பி அவர்களுடைய மனோ பாவனையை விருத்திசெய்யக்கூடியதாயிருக்கவேண்டும். மேலும் ஆசிரியர் பேசும் பாஷை பிள்ளைகள் இயற்கையாப் பேசுவதுபோலவும், தெளிவாகவும், பிள்ளைகளுக்குப் புரியக்கூடியதாகவும் இருக்கவேண்டும். சிறிய கதைகளை வர்ணித்தும், பெரிய கதைகளைப் பல பகுதிகளாகப் பிரித்தும் போதிக்கவேண்டும். கதையில், ஆரம்பம், முன்னேற்றம், உச்சநிலை, முடிவு என நான்கு அம்சங்கள் இருக்கவேண்டும். வாய்மொழியாகச் சொல்லிய பிறகு மாணவர்களைக்கொண்டு சரித்திரக் கதைகளை சம்பாஷணைகள் மூலமாக நடிக்கச்செய்யலாம். புத்தகத்திலிருந்து உணர்ச்சித் ததும்பும்படி படித்துக்காண்பிக்கலாம். பிள்ளைகளை அக்கதையைத் திரும்பச் சொல்லச் செய்யலாம். இடையிடையே கேள்விகள் கேட்டு விடை வருவிக்கலாம். கதையில்வந்த பெயர்களை எழுதிக் காட்டச் செய்யலாம். கதையில் கூறப்படும் பொருள்களைச் சித்திரங்களினால் வரைந்தும், கதையில்வந்த முக்கியமான பெயர்களையும் கதைச் சுருக்கத்தையும் கரும்பலகையில் எழுதியும் காட்டலாம்.

மேற்கண்ட முறையில் ஆரம்ப வகுப்புகளில் சரித்திரம் போதித்தால் முன்னமே கூறப்பட்ட பலன்களை குழந்தைகள் அடையும்படி செய்தவர்களாவோம் என்பது திண்ணம்.

கத்தோலிக்கப் பெரியாரின் பிறந்தநாள்

(S. Muthuveeru)

எளிய நடைப்புலவர் தமிழ் உரைநடைக்கு வழிகாட்டியவர். முதல் நாவலர். பெண் கல்விக்கும் சமூக சீர்திருத்தத்திற்கும் உழைத்த தொண்டர். ஏழை எளியோருக்கு இரங்கும் வள்ளல். உள்ளத்தை உருக்கும் சமரசக்கீர்த்தனங்களைப் பாடிய மகான் யார்? வேதநாயகம் பிள்ளை. தமிழ் இருக்குமட்டும் தமிழர் உள்ளமட்டும் வேதநாயகம் பிள்ளையின் புகழும் திகழும் என்பது வெள்ளிடைமலை.

திருச்சிராப்பள்ளிக்கருகே குளத்தூர் என்னும் சிறிய கிராமம் உள்ளது. அதில் சவரிமுத்துப்பிள்ளை என்னும் கத்தோலிக்க பக்தர் ஆரோக்கியமரியம்மையுடன் இல்லறங்காத்துவந்தார். இவர்களுக்கு போதிய நிலபலன்கள் உண்டு. இருவரும் சிறந்த தெய்வ பக்தர். மாசற்ற அன்பர். சவரிமுத்துப்பிள்ளை தேம்பாவணி படிப்பதும், சுவிசேஷங்களை ஓதுவதும், கீதம் பாடுவதும், ஜெபம் செய்வதும், வந்தவருக்கு விருந்தளிப்பதுமாக வாழ்ந்த இவருக்கு ஒரே கவலைதான் இருந்தது—பிள்ளைக்கவலை.

ஓர் தினம் ஒருபரதேசி குளத்தூருக்கு வந்தார். அவருக்கு நல்ல பசி. தெருவழியே கையேந்திச்சென்றார். யாவரும் அவரை கவனிக்கவில்லை. பசியின்கொடுமையால் ஓர் இல்லத்திற்கருகே மயக்குண்டு சோர்ந்து படுத்துவிட்டார். அப்போது "உனக்கு நீ எப்படியோ, அப்படி எல்லோருக்கும் நட ; ஏழைமுகம் பார்த்து பசிதீர்" ... ... என்றெல்லாம் பைபிள் நீதியைப்படித்துக்கொண்டிருந்தார் சவரிமுத்து. "நீதியும் வேதமும் புத்தகத்திலேதான் ; தன்பசிபோல் பிறர்பசிதீர்க்கும் தருமவான் எங்கே? கடவுளே!" என்று பரதேசி, பசியின் கொடுமையால் கதறினார்.

இச்சப்தத்தைக்கேட்டார் சவரிமுத்து—சோர்ந்த முகத்தைக் கண்டார். உடனே உள்ளே ஓடி, ஒரு சட்டியில் சாதமும் குழம்பும் பிசை என்றார் மனைவியிடம். மரியம்மை உடனே சோறு பிசைந்து கொண்டு நாயகனுடன் வந்தாள். "ஐயா சாப்பிடும்" என்றார் சவரியார். பரதேசி மிக்க மகிழ்வோடு அன்னத்தை உண்டார். அம்மை மோர்கொடுத்தாள். பரதேசி குடித்து ஓர் ஏப்பம் விட்டுப் பல வாழ்த்துரைகள் கூறி ; முடிவில் "எத்தனையோபேர் ஏட்டைப் படிக்கிறார்கள் ; நீதி பேசுகிறார்கள். கை கருணைக்கிழங்கு மனம் கருங்கல்லாயிருக்கின்றன. நீரே நீதியாயகம் உமக்கொரு வேதநாயகம் பிறப்பான்" என்றார். இதைக்கேட்டு மரியம்மை மனம் குளிர்ந்தது.

சவரிமுத்துவின் மனம் மிக்க மகிழ்வெய்தியது. வேதநாயகம் அவர் கண்முன் தவழ்ந்தான். "ஐயா! கொஞ்சம் சோறு கட்டித் தருகிறேன். இராப்போஜனத்திற்கு வைத்துக்கொள்ளும்" என்றார் சவரிமுத்து. "பகல் கணக்கைத் தீர்த்தவன் இரவுக் கணக்கைத் தீர்ப்பான்! கர்மத்தைக் கட்டிச்செல்வானேன்! இந்த உடற்சுமையே

போதுமப்பா. உன்குலம் ஞாயிறும் திங்களும் ஞாலத்துள்ளவரை விளங்கட்டும்" என்று பரதேசி ஆசிகூறிச் சென்ருர்.

மறுமாதமே மரியம்மை கருவுற்ருள். சவரிமுத்தருக்கு தங்கம் போலக் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு "வேதநாயகம்" என பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக மிக்க அன்போடு வளர்த்துவந்தார். இளமையிலே இறைவனிடம் பற்றும்; கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்து ஆங்கிலப் பாஷையையும் ஆற்ற லோடு கற்ருர். பின் மாயூரம், தரங்கம்பாடி முதலிய இடங்களில் டிஸ்திரிக்ட் முனிஸீப்பாக உத்தியோகம் பார்த்தார். பின் அத்தொழி லிலே நேர்மையுடனும், நீதியுடனும் நடந்ததால் மேல் அரசியல் அதி காரிகளால் அவமதிக்கப்பட்டதை எண்ணி, அத்தொழிலே அறவே ஒழித்தார். தம் கல்வித் திறமையாலும் உலக அனுபவத்தாலும், பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி, நீதிநூல், சர்வசமயக் சமரஸக் கீர்த்தனைபோன்ற அரும்பெரும் நூல்களை இயற்றி மக்கள் நல்வழியில் ஒழுகி இன்புற்று வாழ உதவிபுரிந்துள்ளார்.

இவ்வாறு நம் தமிழ் நாட்டில் மக்களுக்குப் பயன்படக்கூடிய பற் பல செய்யுள்களை இயற்றி அருளி கி. பி. 1899-ம்ஆண்டு பூதவுடம்பை நீக்கி புகழுடம்பெய்தினர். இப்பெரியார் செய்த உயர்ந்த பரோபகா ரத்திற்கு கைம்மாருக நாம் இப்பெரியாரின் பிறந்த நாளாகிய பொன் ளை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடி அவரின் அரும்பெரும் செய் யுள்களை ஆர்வத்தோடு படித்து ஆனந்தமடைவோமாக.

கையின் கைங்கிரியம்

[Francis M. Lipton]

ஆகாயத்தில் பறக்கும் சிறுவன் அம்மா! அம்மா! என்ற அபயக் குரலுடன் தூக்கத்தினின்றும் விழிக்கிருன். தந்திரமான நரி தற் காலத்தில் குரங்கு, முயல் இவற்றுடன்கூட தோற்றுவருகின்றது. காதல், கடமையையும் கடந்து நிற்கிறது. காணுமற்போன வைர மோதிரம்? தரித்திர திசைக்காகத் திருடனுக மாறியவன் சர்க்கார் விருந்தாளியாக ஏற்றுக்கொள்ளப்படுகிருன். இத்துடன் ஜீவிய, சுய சரிதைகளும் வெளிவந்த வண்ணமாக இருக்கின்றன. கற்பனைக் கதை களுக்கும் கட்டுரைகளுக்கும் ஏகப்பட்ட எழுத்தாளர்கள் எழுந்தும் அவர்களுக்குத் துணைபுரியும் கையைப்பற்றி கருதுவாரில்லை. கைக் குக் கைங்கிரியமாக இக்கட்டுரை இருக்கட்டுமே.

எண்சாண் உடம்பிற்கு கையே பிரதானம் என்று சொல்லிவிட முடியாது. ஆயினும் சில விசேஷ அம்சங்களில் சிறந்து விளங்கு வதைக் காண்கின்ருேம்.

பழங்காலந்தொட்டு இன்றைய வரையிலும் கம்பர், திருவள்ளு வர், ஔவையார், ஸ்ரீவில்லிப்புத்தூராழ்வார் போன்ற அநேக கவி

களின் இலக்கியக் கலைகளையும் நன்மொழிகளையும் நாம் சுகித்தும் ரஸித்தும் வருவது எதனால்? அவர்களின் கல்வியும், கற்பனையும் ஒருபுறமிருக்க, அழியாப் புகழுடம்பை நாட்டியது கை என்றால் பொய் யாகாது. அன்று அவர்கள் வாய்ப்பாடலுடன் நின்றிருப்பின் இன்று அவர்களை உலகம் கனவில்கூட நினைத்திருக்காது. ஸ்ரீஇராமர் காலத் திய வால்மீகியின் இராமாயணமும், விக்கிரமாதித்திய காளிதாசரின் சாகுந்தல நாடகக் கலையும் (இலக்கியம்) தெலுங்கில் துளசிதாஸரும், ஆங்கிலத்தில் சேக்ஸ்பியர், மில்டன், டென்னிஸன் போன்ற எத்தனை உதாரணங்கள் வேண்டும். கி. மு. இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஆண்ட அசோகர், அரசியலையும், சமயத்தையும் கற்றூணில் பொறித்து வைத்ததினாலன்றோ சரித்திரம் மகா அசோகர் என்றழைக்கிறது.

உண்மை நட்பிற்கு உதாரணமாக கரத்தையே தம் கவிதையில் எடுத்தோதும்பொழுது

"உடுக்கை இழந்தவன் கைபோலவாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறுகின்றார். கருணை காட்டு வதில், மேகத்தைவிட, கை அவயவங்களின் துன்பத்தினும் அபய மளிக்கிறது. என்னே கையின் பெருந்தன்மை!

நம் ஜீவனத்தை கரங்கள்தான் நடத்திவைக்கிறதென்றாலும் உண்மையேதான். தானம், பிச்சை போன்ற தர்ம காரியங்களை நிறைவேற்றுவதிலும் கை முந்திக்கொள்கிறது. இறுதியாக, தெய்வ வழிபாட்டிற்கும் முன்னிருந்து நமக்கு வேண்டும் வரங்களைப் பெற் றுத்தருகிறது. இவ்வாறான சிறந்த கரத்தின் கைங்கிரியங்களுக்கெல் லாம் நன்றி உரியதே.

சுபம்.

விடுகதை

[G. S. William Doraisamy]

கீழ்வரும் பாட்டைக்கொண்டு ஒரு சிறு நீதிக்கதை அமைக்க வேண்டும். இதில் அக்கதை அடங்கியிருக்கிறது:—

ஒருவன்:—தண்ணீருக்குப் பகையான மரத்தின் கீழே முள் ளுக்குப் படைகட்டி சாத்துகிற அண்ணன்மாரே! மூவரும் இரு கால்களுடன் போகிறார்களா?

அவர்கள்:—மூவரும் செத்து மூன்று நாள் ஆயிற்று. மூவ வரைக் கொன்றவன் செத்து மூன்று மாதம் ஆயிற்று. மூவரைச் சுட்டவன் இறந்து ஆறு மாதம் ஆயிற்று.

இருண்ட இதயம்

[கோஹினூர்]

[இருண்ட இருதயத்தில் வெளியாகும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல!]

189998

(கொத்து 36, மலர் 4, பக்கம் 71-ன் தொடர்ச்சி)

"ஜோதி:" அத்தை அவளைக் கூப்பிட்டார்கள். "அம்மா கூப்பிடுகிறார்கள். நீயும் வாடா" என்றாள். அவளுடன் சென்றேன். விசேஷம் ஒன்றுமில்லை. கடைக்கு போய் சாமான் வாங்கிக்கொண்டு வரச்சொன்னார்கள். என்னையுங் கூட்டிக்கொண்டே கடைக்குப் போனாள். அவளுடன் விளையாடுவதே எனக்கு அதிக பிரியமாகிவிட்டது. ஏனெனில் அந்தப் பார்வையும், "இன்னுமா என்னைக் குட்டப்போகிறாய்?" என்ற குரலுமே இதற்குக் காரணம்! மறுநாள் அண்ணன் என்னை ஊருக்குக் கூப்பிட்டது. நான் "வரவில்லை" என்றேன். அதற்குள் ஜோதி "நீங்க வேண்டுமானால் போங்க ஸாமை அனுப்பமுடியாது" என்றாள். அந்த வாயாடியிடம் யார் வாயைக் கொடுக்கமுடியும்? ஆதலால் அண்ணன் விரகாலூருக்குப் போய்விட்டது. நான் அங்கேயே தங்கிவிட்டேன்! தினமும் இருவரும் விளையாடவேண்டும். அப்பப்பா! எப்பேர்ப்பட்ட விளையாட்டு என நினைக்கிறீர்கள்? ஒருசமயம் நான் மாப்பிள்ளை; அவள் பெண்ணாயிருப்பாள். இன்னொருசமயம் நான் குதிரை; அவள் சவாரிசெய்வாள். மற்றொரு சமயம் நான் காட்டில் வேலைசெய்வேன்; அவள் சோறு கொண்டு வருவாள். விளையாட்டில் களைத்தால் என்னைக் கதை சொல்லச் சொல்வாள். நான் சொல்லாவிட்டால் அந்தப் பார்வை பாணத்தை பிரயோகித்துவிடுவாள்! நானில்லாமல் சாப்பிடமாட்டாள்! விளையாடமாட்டாள்!!

அக்காள் லால்குடிக்குப் புறப்பட்டது. அதனுடன் நானும் புறப்பட்டேன். ஜோதி சின்னவள் என்று எங்களுடன் அனுப்பவில்லை. காலையில் ஏமாற்றிவிட்டு போய்விட்டோம். சாயந்திரம் தான் திரும்பினோம். சாயந்திரம் வந்தவுடன் என்னோடு பேசாமல் நந்தவனத்தில் (அக்காள் வீட்டுத்தோட்டம்) உட்கார்ந்துகொண்டாள். நான் அவளிடம் சென்றேன். "போடா! என்னை ஏமாற்றிவிட்டாயே" என்றாள். "நீ சின்னவள் அதனால் நடக்கமுடியாது என்றுதான் விட்டுவிட்டுப் போனோம்" என்றேன்.

ஜோதி: என்னோடு பேசாதேடா!

நான்: நான் நாளைக்கு ஊருக்கு போகிறேன்.

ஜோதி: (ஓடிவந்து என் கைகளைப் பிடித்துக்கொண்டு) ஏண்டா?

நான்: நீதான் பேசமாட்டேன் என்கிறாயே.

ஜோதி: (சிரித்துக்கொண்டே) சீ! சும்மா சொன்னேன்டா! என்று சொல்லிக்கொண்டே வீட்டிற்கு ஓடினாள். "ஜோதி! ஜோதி!!

என்றேன். "இருடா வருகிறேன்" என்று கூறிக்கொண்டே வீட்டிற்குள் ஓடினாள். நான் தனியாக உட்கார்ந்திருந்தேன். "அவள் ஏன் வாடா-போடா என்று பேசுகிறாள்" என்ற ஆத்திரம் தலைக்கு ஏறியது. சின்னவள்தானே பேசிவிட்டுபோகிறாள் என்று மனதிற்கு சமாதானம் கூறினேன்!

கொஞ்சநேரம் தனியாக உட்கார்ந்திருந்தேன். எனக்கும் விளையாட அவள் இல்லாமல் ஒரே சூன்யமாகத் தோன்றிவிட்டது. திடீரென பின்னால் சலசல என சப்தம் கேட்டது. திரும்பினேன். ஆம்! ஜோதிதான்! ஒரு பெட்டிநிறைய கடலைகள் வறுத்து இருந்தது. அதை எனக்குக் கொடுத்தாள். "இது ஏது"? என்றேன். "அம்மா தந்தார்கள்" என்றாள். பெட்டியை எடுத்து நடுவில் வைத்துக்கொண்டு இருவரும் அதைத் தின்ன ஆரம்பித்தோம். திடீரென "அட பாவி" என்ற சப்தம் கேட்டு திரும்பினோம். அத்தை அங்கே நின்றுகொண்டு இருந்தார்கள். எனக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. அத்தை நல்ல அத்தைதான்! ஆனால் அவர்களுடைய மகள் கடலையை ஏமாற்றி பிடுங்கி தின்கிறேன் என்றேது நினைத்துக் கொள்வார்களோ என பயந்தேன். அதற்குள் அவர்கள். ஸாம்! இவளுக்கு இருக்கிறதைப் பார்த்தாயா? காலையில் நீயும் அக்காளும் போனவுடன் இவளுக்கு தின்னக் கொடுத்ததை உனக்காக என்று தின்னாமல் வைத்திருக்கிறாள். திருடி! மாயக்காரி!! உன்னை மயக்கி விடுவாள் போ!!!" என்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள். அவள் மேல் எனக்கு அத்தியந்த பிரீதி உண்டாகிவிட்டது. "ஏன் அப்பவே தின்னவில்லை?" என்றேன். "நீ இல்லாமல் எப்படி தின்பேன்? நீ தின்றால்தான் எனக்குச் சந்தோஷமாயிருக்கும்! நான் கடலை உரிச்சு தரட்டுமா?" என்றாள் கபடமற்ற அன்போடு. கடலை தீர்ந்தது! சிறிது நேரத்தில் பொழுதும் சாய்ந்தது!

காலையில் தலையோடு மூடிக்கொண்டு படுத்து தூங்கிக்கொண்டிருந்தேன். ஆஹா! அற்புதக் கனவு!! "ஒரு மலை. அதன் மேலிருந்து ஒரு ஆறு விழுகிறது. நீர்வீழ்ச்சிதான்! நான்—ஜோதி—அத்தை—அக்காள் நால்வரும் குளிக்கிறோம். எனக்கு மூச்சு தாங்க முடியவில்லை. திக்குமுக்காடி எழுந்தேன்! ஆம்! நீர்வீழ்ச்சிதான்! ஜோதி ஒரு செம்பு நீரை என் முகத்தில் ஊற்றிக்கொண்டிருந்தாள். கோபமாக எழுந்தேன்! 'பட்'. ஒரே குட்டு—ஆத்திரம் தீர்ந்தது! அவள் கண்களிலிருந்து நீர் வீழ்ந்தது! ஓடிப்போய் விட்டாள். அவள் கண்களிலிருந்து விழுந்த நீரைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். ஏனோ மனம் நன்றாயில்லை! திடீரென்று யாரோ தன் கைகளால் என் கண்களைப் பொத்தினார்கள். "ஜோதி" என்றேன். கைகள் எடுக்கப்பட்டன, திரும்பினேன். ஜோதிதான்!

நான்: ஜோதி! மன்னிச்சுக்கோ!

ஜோதி : ஏன் ?

நான் : குட்டினத்துக்குதான் !

ஜோதி : நான் தான் அப்பவே மறந்துட்டேன் ! நான் தண்ணி ஊத்தினதுக்கு நீ மன்னிச்சுக்கோ ! அதை மறந்துடு !!

நான் : ஹூம் ! மாட்டேன் !

ஜோதி: (இரக்கமாக என் கைகளைப் பிடித்துக்கொண்டு) ஏன் ?

நான் : அதை எப்படி மறக்கமுடியும் ?

ஜோதி : (கெஞ்சுதலாக) ஏன் ? மறக்கக்கூடாதா ?

நான் : இந்த ஈரத்துணி இருக்கும் வரை மறக்க முடியுமா ?

உடனே உள்ளே ஓடினுள். மறுநிமிடம் புது துணிகளோடு வந்தாள். ஈரத்துணிகளை கழட்டிவிட்டு புது துணிகளை, உடுத்திக் கொள்ளச் சொன்னுள். நான் என்ன செய்திருப்பேன் ?

துணிகளைக் கட்டிக்கொண்டவுடன், "நான் ஏன் எழுப்பினேன் தெரியுமா ?" என்ருள். நான் "தெரியாது" என்றேன். "பல் விளக்கினுல் தான் சொல்வேன்" என்று நிபந்தனைப் போட்டாள். என்ன செய்வது ? பல் விளக்கி முடித்தேன். ஜோதி ஒரு டம்ளரில் எலுமிச்சம்பழரசம் (Lime Juice) கொண்டுவந்து கொடுத்தாள். வாயில் வைக்க முடியவில்லை—அசாத்தியப் புளிப்பு! சர்க்கரையே போடவில்லை. மருந்தைப்போல் குடித்து முடித்தேன்.

ஜோதி : நன்ருயிருக்கா ?

நான் : ("நன்ருயில்லை" என்ருல் கோபித்துக்கொள்வாளே" என்று நன்ருயிருக்கு எப்படி போட்டே ?

ஜோதி : அம்மாகிட்டே சொல்லாதே ! அம்மாவுக்குத் தெரியாமல் போட்டேன்.

நான் : அத்தை கண்டா திட்டமாட்டாங்க !

ஜோதி : நானே போட்டுக் குடிச்சுட்டதாகச் சொல்லிடுறேன்.

நான் : அடிப்பாங்களே !

ஜோதி : அதைப்பற்றி கவலை என்னுத்துக்கு ? நன்ருயிருக்குல்ல ?

நான் : ஹூம் !

அவள் கோபித்துக்கொள்வாளே என்று "எலுமிச்சை ரசம் நன்ருயிருக்கிறது" என்று சொல்லிவிட்டு அதன்பலனை நாள் முழுதும் அனுபவித்தேன் ! அன்று இரவுக்குள் ஆறுதரம் எலுமிச்சை ரசம் கொடுத்தாள். "கடவுளே !" என்று குடித்தேன் அந்தப் புளிப்பை ! என்ன செய்வது ? ஆனுல் அந்த சமயம் ஒரே ஒரு கேள்வி தான் என் மனதில் உதித்தது. "7 வயது சிறு பெண் எனக்காக எவ்வளவு செய்கிருள் ! இது ஏன்" ? இந்த கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை. இரவு சாப்பிடச் சென்றேன். வெந்தயக் குழம்பு ! சாப்பிட்டு முடிந்ததும் படுக்கைக்குச் சென்றேன். உடம்பில் ஒரு மாதிரி குளிர் எழுந்தது ! படுத்துக்கொண்டு நன்ருகப் போர்த்திக் கொண்டு தூங்கினேன். இரவு முழுவதும் அதிகக்குளிர். 'தண்ணீர்'

'தண்ணீர்' எனக் கதறினேன். பொழுது விடிந்தது! தலையை தூக்க முயன்றேன். குளிர் தாங்க முடியவில்லை. தலையைத் தூக்க முடியவில்லை.

(தொடரும்)

கிராமவாசிகளின் ஏற்றப்பாட்டு

[M. Kulandaisamy]

இவ்விரண்டாம் பதியத்தில் பெண்குழந்தை பிறந்து ஒரே நாளில் அக்குழந்தை இறந்ததை நினைத்து அழுது ஈசனிடம் தன் குறையைக் கூறுகிறாள். நகரங்களில் உள்ளவர்கள் உயர்ந்தவித மான சங்கீதத்தில் ஈடுபடுகிறார்கள். கிராம மக்கள் தங்கள் சூழ் நிலையிலுள்ள சங்கீதத்தின்மேல் பிரியமாக ஈடுபடுகிறார்கள். அத னால் தங்கள் இராகத்தை ஏற்ற இடத்தில் உயர்த்தியும், தாழ்த்தி யும் பாடுகிறார்கள். அவர்கள் அப்பாட்டுகளைப் பாடும்போது நாம் அருகிலிருந்து கேட்டால் என்ன குரல், என்ன உற்சாகம், சந்தோ ஷம், சலிப்பின்மை! சால் எண்ணிக்கைகள் முதலியவற்றைக் கொண்டு இன்புறாதவரும் உண்டோ? அப்பாட்டுகளைக் கேட்டுக் கொண்டே பகுத்தறிவில்லாத மாடுகளும்கூட தங்கள் வேலையை ஒருவாறு கஷ்டமில்லாமல் செய்கின்றன.

இதைப்போலவே மற்ற நடவுநடுதல், நாற்றுபிடுங்கல் முதலிய வேலைக்கும் பாட்டு பாடுகிறார்கள். கிராமவாசிகள் இப்படி கஷ்டப் பட்டு வேலைசெய்து தானியங்களை நகரவாசிகளுக்குக் கொடுக்கிறார் கள் அல்லவா?

ஒருபதிய ஒன்று, ஒருபதிய இரண்டு,
ஒருபதிய மூன்று, ஒருபதிய நான்கு.

ஒருபதிய ஐந்து, ஒருபதிய ஆறு,
ஒருபதிய ஏழு, ஒருபதிய எட்டு,

(என் கணவன்) ஓடறுத்து மாளிகட்ட,
உயர்ந்தவளாம் பெண் பிறந்தாள்,

உருவி வளர்த்தேனே, ஒரு நாளில் போனாளே,
கல்லறுத்து மாளி கட்ட, கனத்தவளாம் பெண் பிறந்தாள்,

கண்போலே வளர்த்தேனே, கால்நாளில் சென்றாளே,
மக்களும் இல்லாமல், மனமுருகச் செய்தீரே,

ஈசனே என் குறையை, ஏறெடுத்துப் பாராயோ.

(தொடரும்)

எம் பாடசாலை நிகழ்ச்சிகள்

1. கல்விக் கண்காட்சி :—23—10—45 காலை 9-30 மணிக்கு பேராசிரியர் A. Rama Aiyar, M.A. (Vice Principal, The National College, Trichy) அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. முந்திய வருஷங்களைவிட இவ்வருஷம் காட்சிப்பொருள்கள் மிகவும் சிறந்து விளங்கின. இப் பொருட்களின் வகை தொகை நேர்மைகளைப் பற்றி திறப்பாளர் திரு. "A. ராம அய்யரவர்கள்" வெகுவாகப் புகழ்ந்ததுடன், இதனைக் கண்ணுறும் ஆரம்ப ஆசிரியர்கள் தம் போதிக்கும் திறமைகளை, வளர்த்துக்கொள்ளும் பொருட்டு, ஷெ காட்சிப்பொருள்கள் ஒவ்வொன்றையும் நன்கு உற்றுநோக்கிப் பயன் அடையுமாறு கேட்டுக்கொண்டனர்.

காட்சிப்பொருள்கள் யாவும் நம் பாடசாலை ஆசிரிய மாணவர்களாலும், ஹைஸ்கூல், எலிமெண்டரிஸ்கூல் மாணவர்களாலுமே தயாரிக்கப்பெற்றவை.

2. மானேஜர் ஸ்வாமி அவர்கட்கு வரவேற்பு :—23—10—45 மாலை 3-30 மணிக்கு இப்பாடசாலை மானேஜரும் தலைமை ஆசிரியருமான சங். A. லூர்து ஸ்வாமி B.A., L.T. அவர்களை, இப்பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரிய மாணவர்கள், ஹைஸ்கூல், எலிமெண்டரிஸ்கூல் மாணவர்கள் முதலியோர் இப்பாடசாலை சபாமண்டபத்தில் வெகு குதூகலத்துடன் வரவேற்று, உபசாரப்பத்திரங்கள் வாசித்தும், ஆடல் பாடல் சம்பாஷணைகள், சிறு நாடகங்கள் முதலியவற்றை நிகழ்த்தியும் அன்னவரை மகிழ்வித்தனர்.

இறுதியில் சங். மானேஜர் ஸ்வாமியவர்கள் பலத்த கரகோஷங்களுக்கிடை எழுந்து, நம் பாடசாலையின் உயரிய இலக்ஷியங்களை விவரித்துக்கூறி, அரிய புத்திமதிகளைப்புகட்டி ஆசீர்வதித்தருளினர்.

3. பந்தய விளையாட்டுகள் (Athletic Sports) :-24-10-45 காலை 7-மணிக்குத்தொடங்கி பற்பல போட்டிப்பந்தயங்கள்—ஓடுதல் தாண்டுதல் முதலியன வெகு உற்சாகத்துடன் நடைபெறலாயின. ஷெ பந்தயங்களில் சிறந்து விளங்கினவர்கட்கும் முக்கியமாய் சாம்பியன் Champion Cup (வெள்ளிக்கோப்பை) பரிசுக்கு உரிமை பெற்ற P. பாலகிருஷ்ணனுக்கு, சங். மானேஜர் ஸ்வாமியவர்கள் தம் மனமார்ந்த வாழ்த்துகளைக்கூறினர்.

4. பரிசளிப்பும் நாடகமும் :—(Distribution of prizes and the School Dramas) 25—10—45 மாலை 5-30 மணிக்கு இவ் வைபவங்கள் திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) ஸ்ரீ T. V. அப்பர்சுந்தர முதலியார், M.A., L.T., M. Ed. (Leeds); M. R. A. S. (Lond.) அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றன.

தலைமை ஆசிரியர் சங். A. லூர்து ஸ்வாமி அவர்கள் சபாநாயகரை ஏற்றவிதமாய் வரவேற்று, இப்பாடசாலையின் வருடாந்திர ரிப்போர்ட்டை வாசித்தளித்தனர். சபாநாயகர் பலத்த கரகோஷத்தினிடை எழுந்து இப்பாடசாலைக் கல்விக்கண்காட்சியைப் பற்றிப்

புகழ்ந்தும் ஆசிரியர்களனைவரும் காட்சிப்பொருள்களைக் கண்ணுற்றுப் பயன் எய்துமாறும் வற்புறுத்தியபின், தகுதியுள்ளவர்க்ட்குப் பரிசுகள் வழங்கினர். கல்வி, நடத்தை, போட்டிப்பந்தயம் முதலியவற்றில் சிறந்து விளங்கினவர்கள் தத்தமக்குரிய பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்.

பின்னர் நம் பாடசாலை அலங்கார நாடகமேடையின்கண் "Dear Departed" என்னும் ஓர் இனிய ஹாஸ்ய ஆங்கில நாடகமும் "சத்தியமே ஜெயம்" என்ற சிறந்த, சமுதாய முன்னேற்றத்திற்கிசைந்ததோர் தமிழ் நாடகமும், எம் பாடசாலை மாணவர்களால் வெகு விமரிசையுடன் நடத்திக்காட்டப்பட்டது. நடிகர்களுள் சிறந்து விளங்கின R. தியாகராஜனுக்கு "வெள்ளிப்பதக்கமும்", அடுத்தபடியாக விளங்கின A. அய்யாக்கண்ணுக்கு "புத்தகப் பரிசும்" சபா நாயகரவர்களால் அளிக்கப்பட்டது.

ஆசிரியர்களின் திருநாள்!

[Sun Dial]

சைகிளில் வேகமாகச் சென்றேன். சற்று முன்னால் சூட்—கோட்—பூட்ஸ்—தொப்பி முதலிய அலங்காரங்களுடன் ஒரு உத்தியோகஸ்தர் போய்க்கொண்டிருந்தார். நான் அவர் பக்கத்தில் சென்றதும் திடுக்கிட்டுவிட்டேன். ஆம்! அவர்தான் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான்..............என்னைக்கண்டதும் சிரித்துக்கொண்டே பேச ஆரம்பித்தார்!

"நீர்தானே ஆசிரியர்களுக்கு சம்பளம் அநியாயமாக குறைத்து கொடுக்கப்படுகிறது என எங்கும் பிரசாரம் செய்பவர்?"

"ஆமாம் ஸார். எலிமெண்டெரி கிரேட் உபாத்தியாயருக்கு 14 ரூபாய், சில இடங்களில் 12 ரூபாய், சில இடங்களில் 16 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்களே இது போதுமா?"

"ஏன் போதாது? வேலைக்குத் தகுந்த கூலி!"

"உங்களுக்குதான் 60 ரூபாய் கிடைக்கிறது. பேசுகிறீர்கள்!"

"ஆசிரியர்கள் செய்யும் வேலைக்கு 14 ரூபாய்கூட அதிகம் தான்!"

"ஆசிரியர்கள் என்ன அப்படி? வேலை குறைவா? அல்லது சக்தி இல்லையா?"

"ஹூம். E. S. L. C. அல்லது S. S. L. C. படித்து டிரெயினிங் படித்துவிட்டால் வாத்தியார்தான்! பள்ளிக்கூடத்தில் தூக்கம்! பணத்திற்கு வேண்டுகோள்கள்"

"ஸார்! ஆசிரியர்களுக்கு வேலைசெய்ய முடியவில்லை என்பது தானே உங்கள் எண்ணம்?"

"சந்தேகமில்லாமல்............சக்தியற்றவர்கள்தான் ஆசிரியர்கள். ஒரு ஆசிரியராவது பள்ளியில் சித்திரம்—சார்டுகள் போட்டு அழகாக பள்ளியை நடத்துகிறுர்களா? ஹி...ஹி...ஹி...பாவம்! திறமை இல்லைபோலும்"

"உங்கள் எண்ணம் தவறு. ஊதியக் குறைவினுல்தான் ஆசிரியர்கள் தங்கள் திறமையை காட்ட உற்சாகமின்றி இருக்கிறுர்கள்!"

"ஒருக்காலுமில்லை! திறமை—சக்தி என்பது ஆசிரியர்களிடமே இல்லை."

"என்ன? (சிரித்துக்கொண்டே) நீங்கள் திருச்சி, R. C. டிரெயினிங் ஸ்கூலில் அக்டோபர் 23 முதல் 28 வரை நடைபெற்ற கண்காட்சியைப் பார்க்கப்போயிருந்தீர்களா?"

"இல்லை! வாத்தியார்கள்தானே! என்னத்தை பிரமாதமாக காட்டப்போகிறுர்கள்?"

"பாவம்! நீங்கள் அபாக்கியசாலிதான்! உங்கள் கண்கள்கூட ஒளி இழந்த......"

"என்ன? அந்த கல்வி கண்காட்சிசாலையில் என்ன அப்படிப் பிரமாதமாக செய்துவிட்டார்கள்?"

"சொல்வதினுல் விளக்கமுடியாது. அவைகளை பார்த்துதான் ரஸிக்கவேண்டும்!"

"எப்படி அவைகளை வைத்திருந்தார்கள்?"

"ஆறு பெரிய அறைகளை எடுத்து சரித்திரம், பூகோளம், சித்திரம், தமிழ், இயற்கை இப்படி ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அறையை ஒதுக்கி அதில் கலைகளில் சிகரையும், ஆசிரியர்களின் அரிய திறமையையும் உங்களைப்போன்ற அறியாதவர்களுக்கு விளக்கிஞர்கள்"

"செய்து வைத்தவைகளைப்பார்த்தால் விளங்கிவிடுமோ?"

"இல்லை ஸார்! அந்த அபூர்வ பொருள்களைப்பற்றி விளக்கிச் சொல்ல ஒவ்வொரு ஆசிரிய மாணவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்?"

"ஹா! ஸபாஷ்!! என்னத்தை அங்கே வைத்திருந்தார்கள்"

"தேசத்தலைவர்களது சித்திரங்கள், எரிமலை, சிவாஜியின் படம், சாரணர் கூடாரமாதிரி, ஒருமாதிரி கிராமம், ஏரோப்பிளேன், பெரிய பீரங்கி, பாம்பன் பாலம், சினிமா காட்டும்விதம், ரேடியோவின், தமிழ் இங்கிலீஷ் போதிக்கும் நவீனமுறைகள், ஸகார பாலைவனம், "நாடக உலகமே" என்னும் ஒரு கதை, சிவிக்ஸிற்கு........."

(இடைமறுத்து) "போதும் போதும் நிறுத்தும்! இவ்வளவையும் செய்தது யார்?"

"என் ஆசிரிய சகோதரர்கள்!"

"எக்ஸிபிஷனுக்கு மூலகாரணம் யார்?"

"இது யாராய்தானிருக்கும்? ஸ்ரீ லூர்துசுவாமி B. A. L. T. அப்பள்ளியின் மானேஜர், எட்மாஸ்டர் அவர்கள்தான் என்பதற்குக் கூடவா சந்தேகம்?"

"நன்ருயிருந்திருக்கும் போலிருக்கிறது."

"ஆஹா! அந்த எழில் மிகுந்த கலைகாட்சியை கண்டதும் நான் பெருமை கொள்கிறேன் ஆசிரிய சமூகத்தைப்பற்றி!"

"இதோ இப்பொழுதே அவைகளை பார்த்துவருகிறேன்."

"வருத்தப்படுகிறேன். இரண்டு வருஷத்திற்கு ஒருமுறைதான் அவை நடக்கும். 1947-ல் பாருங்கள். இதோ இப்படி நான் போக வேண்டும். போய்வருகிறேன்".

"சரி! போய் வாரும்! 1947-ல் அந்த ஆசிரியர்களது திருநாளைப் பார்க்கவருகிறேன்!

சிறு கதை

"நான் பிறந்த நாள்"

(S. Anthonimuthu)

இப்பிரபஞ்சத்திலுள்ள பிராணிகள் தங்கள் வர்க்கத்தை இரண்டு விதங்களில் விருத்தி செய்துகொள்ளுகின்றன. ஒன்று குட்டிபோட்டு வர்க்க விருத்தி செய்துகொள்வன; மற்ருென்று முட்டைகள் இட்டு வர்க்க விருத்தி செய்வன. ஆனால் நானேவென்றால், மேற்கூறிய இரண்டுவிதங்களிலும் சேராமல் தாவர இனத்தைச் சேர்ந்தவளாயிருக்கிறேன். நான் பூவின்வர்க்கத்தைச் சேர்ந்தவளாயினும், தனவான்களும் ஏழைகளும் என்னை ஒரேவிதமாய்க் கருதி, என்மீது அவர்கள் கொண்டிருக்கும் அன்பை என்னைக் கண்டவுடன் சமர்ப்பிக்கின்றனர். நான் மற்றவர்களைப்போல் என் தாயாகிய செடியின்கண்ணிருந்தே தோன்றினும், கடவுளின் அரும் பெரும் செய்கைகளை எடுத்துரைக்க, அக்கடவுளின் வல்லமையினால் வந்தவளாவேன்.

நான் எனது தாயின் தண்டுபாகத்தில் தோன்றி, வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து, தேர்ச்சி அடைந்து சென்ற மார்கழி மாதம் பதினொன்றும் தேதி இரவு சுமார் 12 மணிக்கு ஓர் புஷ்பத்துக்கு வேண்டிய குணங்களுடன் நான் இவ்வுலகின்கண் மலர்ந்தேன். உண்மையில், நான் மலர்ந்த அக்கணமே மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. இதுவுமல்லாமல், எங்குபார்த்தாலும், பட்டாஸ் சப்தங்களும், மணிகளின் ஓசையும் மேளங்களின் பேரொலிகளும் எனக்கு வெகு சந்தோஷத்தை உண்டுபண்ணின. உடனே நான் என் தாயாகிய செடியுடன் சம்பாஷித்து, அம்மா, அம்மா, பார்த்தீர்களா? நான் பிறந்த இந்த தினத்தில் எனக்காக பட்டாஸு சப்தங்களும்,

வாண மத்தாப்புக்களும், மேளங்களின் பேரொலியும் சப்திக்கின்றன என்றேன்.

தாய்: ஆமாம், ஆமாம். இன்று நீ பிறந்த தினமாத்திரம் அல்ல. பிசாசுக்கு அடிமையான மனுஷமக்களை மீட்ட யேசுபிரானின் பிறந்த தினம் இன்றே. அதனால்தான், இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன.

பூ: அப்படியா; சொல்லுங்கள் இன்று என்ன விசேஷம் இருக்கும்?

தாய்: என்ன இருக்குமா! உன்னைப் பறித்துக்கொண்டுபோய் கோயிலில் ஜோடிப்பார்கள்.

பூ: அப்புறம் என்னம்மா?

தாய்: சற்று தூங்கு, எனக்கும் அதிக களைப்பாய் இருக்கிறது. பகலில் எல்லாம் சொல்கிறேன்.

பூ: எனக்கு கொஞ்சமேனும் தூக்கம் வரவேயில்லை யாதலால் என் தாயுக்கு மேலும் மேலும், தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்தேன். என் தாயும் என்மேல் கொண்டிருந்த அன்பினால், என் மனக் கவலையை நீக்கி தூய பனித்துளிகளினால் என்னைக் குளிப்பாட்டி, காற்று என்னும் சீப்பினால் எனது கூந்தலாகிய இதழ்களை ஒழுங்காக வாரி அமைத்து காண்போர் என்னைக் கண்டு கவர்ந்துவரும் வண்ணம் செய்துவிட்டுச் சற்று நித்திரையிலாழ்ந்தாள்.

சுமார் அதிகாலை 4 மணி இருக்கும். சேவல்கள் வேலைக்காரர்களை எழுப்ப அடிக்கடி கூவிக்கொண்டிருந்தன. எங்குபார்த்தாலும் ஒரே இருட்டு. எனினும் நான் காற்றுடன் கூடி நடனம் ஆடிக்கொண்டிருந்தேன். இவ்விதம் நான் நடனமாடிக்கொண்டிருந்த பொழுது, காலை 6 மணிக்கு, என் எஜமானியான புஷ்பமரி என்னைக் கண்டதும் ஓட்டமாக ஓடிவந்து என்னை அவள் கண்களில் ஒத்தி இனியதோர் முத்தமும் கொடுத்தாள். என்னால் அவளுக்குண்டான சந்தோஷம் அவள் மனதை பூரிக்கச்செய்தது. பின்பு இவள் என்னைக் கட்டி, சேர்த்தணைத்துக்கொண்டு, ரோஜா, பூவே! நீ இன்று மலர்ந்ததினால் உன் திருநாளை வெகு விமரிசையுடன் கொண்டாடுவேன். இன்று உன்னைப் பல்லக்காகிய என் சிரசில் ஏற்றி, ஊர்கோலம் செய்வேன் என்று பலவாறு என்னைப் போற்றினாள். இவ்விதம் அவள் பேசப் பேச எனக்கோ ஆனந்தம்.

சுமார் 8 மணிக்கெல்லாம் என்னைச் சுற்றி சுமார் 15 பேர்கள் என் கட்டழகைக் கண்டு பிரமித்து நின்றனர். எஜமானி புஷ்பமரி வந்ததும் என்னைப் பறித்து முத்தம்கொடுத்து தனது கைக்குட்டையில் பொதிந்து தனது மடியில் வைத்து விரைவாக வீடு சேர்ந்து

என்னை மற்றொருமுறையும் முத்தமிட்டு தனது கூந்தலில் விளங்குமாறு என்னை இராணியாக வைத்தாள். என் எஜமானி புஷ்பமரி எங்கு சென்றாலும் அங்கெல்லாம் நானும் அவளுடன் அநேகவிதமான காட்சிகளைக் கண்டு களிப்படைந்தேன். இந்தவிதமாக அந்ததினத்தில் பாதிநாள் வெகு சிறப்பாக புஷ்பமாலையுடன் அந்ததினத்தைக் கொண்டாடினேன்.

பிற்பகல் மாலை 3 மணிக்கு என்னை புஷ்பமரி நாடகசாலைக்கு எடுத்துக்கொண்டு சென்றாள். என்னைப்பற்றி புகழ்ந்து பேசுவதற்காக முன்வரிசையில் போய் உட்கார்ந்தாள். பின்னால் உள்ளவர்கள் என்னைப் பார்த்து ஆஹா! என்ன அழகு பார்! இந்த ரோஜா புஷ்பம்! என்று என் அழகை வர்ணித்தார்கள் அங்கிருந்த பெண்கள். என் ஆனந்தத்தை ஆமோதித்து புஷ்பமரி தனது மெல்லிய விரல்களால் தடவி என்னை நிம்மதிப்படுத்தினாள்.

நாடகம் ஆரம்பமாயிற்று. நான் புஷ்பமரியின் கூந்தலில் இருந்தமையால் என்னால் நாடகக்காட்சியைப் பார்க்கக்கூடவில்லை. உடனே என்னை அவள் எடுத்துத் தன் கண்களில் ஒத்திக்கொண்டு, தன் கரத்தில் தாங்கிக்கொண்டே இருந்தாள். நாடகம் முடிந்தானதும், திரும்பவும் என்னை சிரசில் வைத்துக்கொண்டு வீடு வந்துசேர்ந்தாள்.

இதையெல்லாம் உணர்ந்துவந்த நான் "இதுதான் உலகமென்று" ஒரு திட்டமான எண்ணத்தை மனதிற்கொண்டு, பின்வருமாறு புஷ்பமரியிடம் சொன்னேன்.

ரோஸ்: என் அம்மா நான் இன்றுதான் மலர்ந்தேன், அதற்குள் என் அழகெல்லாம் குறைந்துகொண்டே வருகிறதே!

189998

புஷ்பமரி: ஒன்றுமில்லை எல்லோரும் ஒருநாளைக்கு இறப்பது நிச்சயம். அதிலும் தாவர இனத்தைச் சேர்ந்தவளாகிய நீ சீக்கிரம் இறக்கக்கூடும். அதனால்தான் நீ காலையில் இருந்த அழகில் நூற்றில் ஒருபங்குகூட இப்பொழுது இல்லை.

ரோஸ்: அப்படியா? சரி! இன்று நான் மலர்ந்த தினம். ஆதலால் நான் காணக்கூடாத பற்பல காட்சிகளையும் அறியவிஷயங்களையும் அளித்து, இன்னும் வெகுமதியாக என்னை உயர்ந்த ஸ்தானத்தில் உயர்த்தி என் மனம் களிப்படையச்செய்தீர்கள். என்னைவிட பாக்கியவதி வேறு யாருமில்லை என்றே சொல்லலாம். ஏனெனில் நான் மலர்ந்த இன்றே அநேக புதுமையான பொருள்களைக் கண்டேன், ஆனந்தமடைந்தேன். இப்பொழுது என்னை உண்டுபண்ணின சிருஷ்டிகரிடம் போவேன் என்று சொல்லி வாடி வதங்கி தனது அழகிய இதழ்களாகிய கண்களை மூடிக்கொண்டது.

உதிர்ந்த இதழ்கள்

(ராஜி)

I. தெய்வம்

1. நம்பிக்கையோடும் பயபக்தியோடும் கேட்கும் விண்ணப்பத்திற்கு செவிசாய்க்கும் மாபெரும் சக்தியே தெய்வமாகும்.

2. தெய்வம் விரும்புவது மதத்தையல்ல. மனத்தைதான்!

3. மனிதனது விருப்பங்கள் யாவும் பூர்த்தியடைவதில்லை. ஏனெனில் அந்த நிலையில் அவன் கடவுளை மறப்பது திண்ணம்.

4. செல்வர்கள் தெய்வத்தைக்காண்பது அரிது. ஏனெனில் அவர்கள் கண்களை செருக்கு மறைத்துவிடுகிறது.

5. உன்னைவிட எளியவர்களைப் பார். அப்பொழுது தெய்வம் உன் மனத்தில் நர்த்தனம் செய்யும்.

6. தெய்வத்திற்கு செலுத்தவேண்டிய காணிக்கைகளை ஏழைகளுக்குச் செலுத்து.

7. "தெய்வமே! தெய்வமே!!" என்பதனால் மட்டும் பலனில்லை. செய்வதை செய்துகொண்டே தெய்வத்தை நினை. பலன் கிடைக்கும்! ஆறுதலும் அடைவாய்.

II. பிரார்த்தனை

8. பிறருக்காக பிரார்த்தனை செய். அப்பொழுது உனக்கு தேவை என்று ஒன்றேனும் இருக்காது.

9. பிரார்த்தனையின் சப்தம் இதயத்திலிருந்தே வரவேண்டும். வாயின் வார்த்தைகளினால் பூஜ்யபலனே உண்டு!

10. பிரார்த்தனையில் நன்றிகூறுவதுதான் முக்கிய அம்சம். அதை விட்டுவிடாதே!

11. வியாதியஸ்தனுக்காக பிரார்த்தனை செய்; விரோதிக்காகவும் பிரார்த்தனை செய்! கப்பலில் செல்வோர்க்கு பிரார்த்தனை செய்; கள்ளர்க்காகவும் பிரார்த்தனை செய்! கசடர்காகவும் பிரார்த்தனை செய்!

12. உருக்கமான பிரார்த்தனைக்கு இரக்கமான பதில் கிடைக்கும்.

13. ஆலயத்திற்குப் போய் பராக்கு பார்ப்பதைவிட உள்ளத் தூய்மையுடன் வீட்டிலிருப்பதே மேல்!

14. பிரார்த்தனையில் உன் நெஞ்சை கடவுளுக்கு காணிக்கையாகக்கொடு.

15. உன் பிரார்த்தனையில் தேச விடுதலையையும் நினை.

Reg. No. M. 1534

சங்கீதம்

சுகாதாரம்

8, இராகம்: ஹிந்துஸ்தான் தோடி] [தாளம்: ஆதி

பல்லவி

2		2
ஸா ரீ கா மா	பத பம	கரி கா
பா லர் க ளே	வா. ருங்	கள்சு கா
,க பம கரி ஸரி	கா ரீ	ஸா ;
.தா . ர முறைகளை	கே ளுங்	கள் .

சரணங்கள்

பா பத தா தா	பா பத	பம மா
கா லையில் எழுந் து	கட வுளைத்	தொழுது
பநீத பா பத	மா ;	கம கம
கை கால் முகம் கழு	வி. .	. . . .
ஸ்ா ஸஸ் ஸ்ா ஸ்ா	நீஸ் நி	தா பா
வே லைக்கு செல் முன்	விருப்பமாய்	நீ ரில்
பத நித பம கம	கத பம	கரி ஸநி
குளித்திடு வாய் சுக	மே . .	. . . .

(பாலர்)

(மற்ற அடிகளை இதேமாதிரி பாடவும்.)

2. கந்தையானாலும் கசக்கிக்
கட்டென்ற கவிதையை மறக்காதே
சந்துபாதை ஜல மல வாடைகளில்
சகஜமாய் நடக்காதே.

3. வீடுகள் சுற்றி சாக்கடை எச்சில்
குப்பை கூளங்களே
நாட்டில் விளைத்திடும் பற்பல நோயுக்குக்
காரண மென்றறிவாய்

4. அழுகிய பழத்தையும் ஆறிய உணவையும்
அவசியம் புசிக்காதே
தொழுவம் சாக்கடை குப்பை மேட்டருகில்
கூடியே வசிக்காதே

5. முகத்தை மூடி தூங்குவதென்றும்
சுகத்துக்கு இடஞ்சலாகும்
அகத்தை என்றும் சுத்தமாய் வைத்திரு
அது மிக சுகந்தானே.

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondary Training and High School.
Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. Ty.—I, 12—11—1945.